02/09/2016

**Know Your Customer Guidelines**

**(Updated up to September 02, 2016)**

*(This is a summarised and simplified version of the Reserve Bank of India's Know Your Customer guidelines.)*

**Content Source from(https://www.rbi.org.in/commonman/Tamil/scripts/FAQs.aspx?Id=840#top)**

# உங்கள் வாடிக்கையாளரை அறிதலின் (Know Your Customer-KYC) வழிகாட்டுதல்கள்

## 1. உங்கள் வாடிக்கையாளரை அறிதல் (KYC) என்றால் என்ன? அது ஏன் தேவை?

**KYC** உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் என்பதன் சுருக்கம். வங்கி தனது வாடிக்கையாளர்களின் அடையாளம் மற்றும் முகவரி குறித்த தகவலைப் பெறும் நடைமுறையே **'உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்'** நடைமுறை. இதனால் வங்கிகள் அளிக்கும் சேவைகள் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்படும். வங்கியில் கணக்குகள் தொடங்கும்போது, இந்த நடைமுறை முடிக்கப்படவேண்டும். வங்கிகள் **KYC** விவரங்களை அவ்வப்போது திருத்தியமைத்துக்கொள்வதும் அவசியமாகும்.

## 2. ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்கத் தேவையான KYC செயல்பாடுகள் யாவை?

வாடிக்கையாளரின் சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம், தனி நபர் அடையாளச் சான்றாவணம் மற்றும் முகவரிச் சான்று அளிக்கவேண்டியது அவசியமாகும்.

## 3. அடையாளச் சான்றாவணம், முகவரி அடையாளம் இவற்றிற்காக என்னென்ன ஆவணங்கள் கொடுக்கப்படவேண்டும்?

இந்திய அரசு 6 ஆவணங்களை **'அலுவலக ரீதியாக மதிப்புள்ள ஆவணங்கள்' (Officially Valid Documents - OVD)** அடையாளச் சான்றாவணமாக அறிவித்துள்ளது. **இவையாவன:** கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்), ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, வருமானவரிக்கணக்கு அட்டை, **UIDAI** வழங்கும் ஆதார் அட்டை மற்றும் **NREGA** வழங்கும் பணி அட்டை இவற்றுள் ஏதாவது ஒன்றை அடையாளச் சான்றாவணமாக அளிக்கலாம். இவற்றில் உங்கள் முகவரியும் இருக்குமானால், அதுவே முகவரிச் சான்றாவணமாக ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றில் உங்கள் முகவரி இல்லாதபட்சத்தில், முகவரியுடன் கூடிய வேறொரு சான்றாவணத்தை அளிக்கவேண்டும்.

## 4. மேற்குறிப்பிட்ட அடையாளச் சான்றாவணம் எதுவும் என்னிடம் இல்லை. என்னால் வங்கியில் கணக்கு தொடங்கமுடியுமா?

ஆம். முடியும். **'சிறுகணக்கு'** என்று கூறப்படும் வங்கிக் கணக்கை நீங்கள் தொடங்கலாம். சமீபத்தில் எடுக்கப்பட்ட உங்கள் புகைப்படத்துடன் வங்கி அதிகாரி முன்னிலையில் உங்களின் கையொப்பம் / கைநாட்டு வைத்து சிறுகணக்கைத் தொடங்கலாம்.

## 5. சிறுகணக்கிற்கும் இதர வங்கிக் கணக்குகளுக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா?

ஆம். சிறுகணக்குகளில் பின்வரும் கட்டுப்பாடுகள் உண்டு.

சிறுகணக்குகளில் எந்தவொரு சமயத்திலும் நிலுவைத் தொகை ரூ.50,000/-ஐ விட அதிகமாக இருக்கக் கூடாது.

ஒரு ஆண்டில் வரவு வைக்கப்பட்ட மொத்தத்தொகை ரூ.1,00,000/-த்திற்கும் அதிகமாக இருக்கக் கூடாது.

ஒரு மாதத்தில் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட பணம் அல்லது மாற்றப்பட்ட பணம் ரூ.10,000/-ஐ விட அதிகமாக இருக்கக் கூடாது.

அயல்நாட்டிலிருந்து வரும் பணம் இத்தகு கணக்குகளில் வரவு வைக்கப்பட மாட்டாது.

முதலில் இத்தகு கணக்குகள் 12 மாதங்கள் வரை செயல்பாட்டுடன் இருக்கும். அதன்பின்னர், கணக்கு வைத்திருப்பவர் கணக்குத் தொடங்கி ஒரு வருடத்திற்குள் ஏதாவது அடையாளச் சான்றாவணத்திற்கு (OVD) விண்ணப்பித்ததற்கான சான்றைக் காட்டும்பட்சத்தில், மேலும் 12 மாதங்களுக்கு செயல்பாட்டுடன் விளங்கும்.

**6. அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்கள் (OVD) எதுவும் என்னிடம் இல்லாதபட்சத்தில், என்னால் வங்கிக் கணக்கை (கட்டுப்பாடுகளுடன் கூடிய சிறு கணக்குகள் போல் இல்லாமல்) தொடங்கமுடியுமா?**

அடையாளச் சான்றாவணத்திற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் கொடுத்து சாதாரண வங்கிக் கணக்கைத் தொடங்க முடியும்.

(i) மத்திய / மாநில அரசுத்துறைகள், சட்டரீதியான / நெறிமுறை அதிகாரிகள் பொதுத்துறை நிறுவனங்கள், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள், பொதுத்துறை நிதிநிறுவனங்கள் வழங்கிய புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை

**(அல்லது)**

(ii) கெசட் அதிகாரி கையொப்பமிட்டு அத்தாட்சி அளிக்கும் கடிதம் (புகைப்படத்துடன்).

முகவரிச் சான்றிற்குப் பின்வரும் ஏதாவது ஒரு ஆவணம் —

i. சமீபத்திய இரண்டு மாத காலத்திற்குரிய பயன்பட்டு பில்கள் (உ-ம். மின்சாரம், தொலைபேசி, மொபைல்போன், சமையல் எரிவாயு, குடிநீர் வரி போன்றவை).

ii. சொத்து / முனிசிபல் வரி ரசீது.

iii. அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கு / வங்கிக் கணக்கு அறிக்கை.

iv. பொதுத்துறை அலுவலகங்கள் / அரசுத்துறைகள் வழங்கும் முகவரியுடன்கூடிய ஓய்வூதிய ஆணைகள்.

v. மத்திய / மாநில அரசுத்துறைகள் சட்டரீதியான / நெறிமுறையாளர்கள் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள், பொதுத்துறை நிதிநிறுவனங்கள், பங்குப்பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட குழுமங்கள் தத்தம் பணியாளர்களுக்குக் குடியிருப்புக்காக வழங்கும் ஆணைகள் அலுவலக ரீதியாக இத்தகு நிறுவனங்களுடன் குடியிருப்புக்காக ஏற்படுத்திக் கொள்ளும் உரிமத்திற்கான ஒப்பந்தங்கள்.

vi. அயல்நாட்டு ஆட்சிப்பரப்பெல்லையுடைய அரசுத்துறைகள் அல்லது இந்தியாவிலுள்ள அயல்நாட்டுத் தூதரகங்கள் வழங்கும் ஆவணங்கள்.

மேலே குறுப்பிட்டவை பொதுவான வழியாகாது. இவ்வாறு எளிமையாக்கப்பட்ட செயல்முறையை ஒரு வாடிக்கையாளுக்காக ஏற்றுக்கொள்ளலாமா என்பது வங்கியின் முடிவிற்கு விடப்படுகிறது.

**7. என்னுடைய பெயர் மாற்றப்பட்டுவிட்டால், என்னிடம் அலுவலக ரீதியாக மதிப்புடைய (OVD) ஆவணங்கள் புதிய பெயரில் இல்லாவிட்டால், நான் எவ்வாறு வங்கிக் கணக்கைத் தொடங்கமுடியும்?**

மாநில அரசு வழங்கும் திருமணப் பதிவுச் சான்றிதழ் / பெயர் மாற்றம் அறிவிக்கப்பட்ட அரசிதழ் ஆகியவற்றுடன் பழைய பெயரில் உள்ள ஏதாவது மதிப்புடைய சான்றாவணத்தின் நகலுடன் (சான்றொப்பமிடப்பட்டது) வங்கியிடம் அளிக்கலாம். திருமணம் அல்லது பெயர் மாற்றம் செய்தவர்கள் மேற்குறிப்பிட்ட வகையில் வங்கியை அணுகி புதிய பெயரில் கணக்குத் தொடங்கலாம்.

**8. இடர்வரவு மதிப்பீட்டின் அடிப்படையில் வங்கிகள் வாடிக்கையாளர்களை வகைப்படுத்த வேண்டியது அவசியமா?**

ஆம். வாடிக்கையாளர்கள், கருப்புப் பண ஒழிப்பு **(AML)** இடர் வரவு செயல்முறைகளால் கணக்கிடப்படுவார்கள். இந்த மதிப்பீட்டைப் பொறுத்து இடர் வரவு **'குறைவு', 'நடுத்தரம்', 'அதிகம்'** என்று வகைப்படுத்தவேண்டுவது அவசியமாகும்.

**9. வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு இந்த இடர்வரவு வகைப்படுத்துதலைத் தெரிவிக்கிறார்களா?**

இல்லை.

**10. KYC-க்குத் தேவையான ஆவணங்களை நான் வங்கிக்குத் தர மறுத்தால் என்ன நடக்கும்?**

நீங்கள் **KYC**-க்குத் தேவையான ஆவணங்களைத் தராவிட்டால், வங்கியால் உங்களின் கணக்கைத் தொடங்கமுடியாது.

**11. ஆதார் அட்டை அடையாளம் மட்டுமே இருந்தால் வங்கிக் கணக்கைத் தொடங்கமுடியுமா?**

ஆம். ஆதார் அட்டை, அடையாளம் மற்றும் முகவரிச் சான்றாவணமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**12. வங்கிக் கணக்குத் தொடங்க ஆதார் அட்டையைக் கொடுக்கவேண்டியது அவசியமா?**

இல்லை. அலுவலக ரீதியாக மதிப்புடைய **(OVD)** இதர சான்றாவணங்களில் ஏதாவது ஒன்றைக் கொடுக்கலாம்.

**13. E-KYC என்பது என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது?**

ஆதார் எண் உடையவர்களுக்கு மட்டுமே **E-KYC** என்பதைச் செயல்படுத்த முடியும். **E-KYC**-ஐப் பயன்படுத்தி **UIDAI** -ஐ **(Unique Identification Authority of India)** உங்களுடைய அடையாளம் / முகவரித் தகவல்களை பயோ மெட்ரிக் ஆதன்டிகேஷன் மூலம் வங்கிக்கிளை / வங்கிவர்த்தக தொடர்பாளருக்குப் பகிர்ந்தளிக்க முடியும். இதற்கு வெளிப்படையான அனுமதியை ஒருவர் கொடுத்தால் போதுமானது. அதன் பின்னர் **UIDAI** உங்களைப் பற்றிய தகவல்களை (பெயர், வயது, பாலினம், புகைப்படம், முகவரி ஆகியவற்றை) மின்னணு சாதனம் மூலம் வங்கிக்கு அனுப்பிடும். இவ்வாறு அனுப்பப்படும் தகவல் அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணமாகக் கருப்புப் பண தடுப்பு **(PML)** விதிகளின் கீழ் அனுமதியளிக்கப்படுகிறது. **KYC** - ஐ சோதித்தறியவும் இது உதவுகிறது.

**14. ஒருவரின் அறிமுகம் வங்கிக் கணக்கிற்குத் தேவையா?**

இல்லை. அறிமுகம் தேவையில்லை.

**15. நான் சென்னையில் வசிக்கிறேன். எனது முகவரிச் சான்றாவணம் தில்லியிலுள்ள முகவரியைக் காட்டுகின்றன. சென்னையில் நான் வங்கிக் கணக்கைத் தொடங்க முடியுமா?**

ஆம். சென்னையில் நீங்கள் கணக்குத் தொடங்கமுடியும். அலுவலக ரீதியாக மதிப்புடைய சான்றாவணத்தில் சென்னை முகவரி இல்லாமல் தில்லி முகவரி மட்டும் இருந்தாலும் பரவாயில்லை. அந்த சான்றாவணத்தை அலுவலக ரீதியாக மதிப்புடைய சான்றாவணமாக வங்கியிடம் ஒப்படைத்து, சென்னை முகவரியை தொடர்புக்காக உறுதிமொழியுடன் தெரிவிக்கலாம்.

**16. என்னுடைய வங்கிக் கணக்கை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்ற முடியுமா? மறுபடியும் KYC நடைமுறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமா?**

ஒரே வங்கியின் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குக் கணக்கை மாற்ற முடியும். இத்தகைய மாற்றத்திற்கு **KYC** நடைமுறைகளைப் பின்பற்றத் தேவையில்லை. முகவரியில் மாற்றமிருந்தால், புதிய முகவரிக்கான விவரங்களை உறுதிமொழிச் சான்றுடன் அளிக்கவேண்டும். நீங்கள் ஏற்கனவே கொடுத்துள்ள **OVD** -யில் (அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்கள்) உள்ள முகவரி இனி எந்தவிதத்திலும் உங்களுக்குச் சம்பந்தமில்லாததாக (நிரந்தர முகவரியுமில்லை, தற்போதைய முகவரியுமில்லை) ஆகிவிடுமானால், புதிய முகவரிக்கு உரிய சான்றாவணத்தை **(OVD)** 6 மாதங்களுக்குள் வங்கிக்குக் கொடுத்திட வேண்டும். மற்றொரு வங்கியில் கணக்குத் தொடங்க வேண்டுமானால் **KYC** நடைமுறைகளைப் பின்பற்றவேண்டியது அவசியமாகும்.

**17. நான் ஏற்கனவே வங்கிக் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் ஒவ்வொரு முறை புதிய கணக்கு (வெவ்வேறு வகை) தொடங்கும்போதும் அடையாளம் மற்றும் முகவரிச் சான்றாவணங்களைக் கொடுக்கவேண்டும்?**

இல்லை. ஒரு வங்கியில் ஒரு கணக்கிற்காக **(சிறுகணக்கு தவிர) KYC** தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால், மற்றொரு கணக்கு தொடங்க சான்றாவணங்களை அளிக்கவேண்டிய அவசியமில்லை.

**18. என்னுடைய வருமானவரிக் கணக்கு எண்ணை (PAN) எத்தகைய வங்கிப் பரிவர்த்தனைகளில் குறிப்பிடவேண்டும்?**

கணக்குத் தொடங்கும்போதும், ரூ.50,000/-க்கு அதிகமான பணம் / பணம் சாரா பரிவர்த்தனைகளில் வருமான வரிக் கணக்கு எண் குறிப்பிடப்படவேண்டும். வருமானவரிக் கணக்கு எண் குறிப்பிடப்படவேண்டிய பரிவர்த்தனைகள் பட்டியல் வருமான வரித்துறையின் இணையதளத்தில் உள்ளது. அதைப் பின்வரும் முகவரியில் அணுகலாம்.

http://www.incometaxindia.gov.in/layouts/15/dit/pages/viewer.aspx?grp=rule&cname=CMSID&cval=103120000000&searchFilter=&k=114b&IsDlg=0

**19. பற்று / வரவு அட்டைகளுக்கு KYC நடைமுறை பொருந்துமா?**

ஆம். **KYC** நடைமுறை பற்று / வரவு / ஸ்மார்ட் அட்டைகளுக்கும் கூடுதலாக வழங்கப்படும் அட்டைகளுக்கும் பொருந்தும். பற்று அட்டை என்பது கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. வங்கிக் கணக்கு **KYC** நடைமுறையைப் பின்பற்றியே தொடங்கப்படுவதால், பற்று அட்டை வழங்குவதற்குத் தனியாக **KYC** நடைமுறையைப் பின்பற்றத் தேவையில்லை.

**20. எனக்கு வங்கிக் கணக்கு இல்லை. ஆனால் நான் வேறொருவருக்கு வங்கி மூலம் பணம் அனுப்பவேண்டும். KYC எனக்குப் பொருந்துமா?**

ஆம். உள்நாட்டில் ரூ.50,000/-மும் அதற்கும் அதிகமாகப் பணம் அனுப்பும்போதும், அயல்நாட்டுக்குப் பணம் அனுப்பும் போதும் அத்தகைய பரிவர்த்தனைகளுக்கு **KYC** நடைமுறையைப் பூர்த்திசெய்வது அவசியம்.

## 21. பணம் கட்டி வரைவோலை (DD) / கொடுப்பாணை (PO) / பயணக் காசோலைகள் (Travelers Cheques) வாங்க முடியுமா?

ஆம். ரூ.50,000/-க்கும் குறைவான தொகைக்கு வரைவோலை, கொடுப்பாணை, பயணக் காசோலைகள் வாங்க முடியும். ஆனால், ரூ.50,000/- மற்றும் அதற்கும் அதிகமான தொகைக்குரிய உபகரணங்களை வங்கிக் கணக்கில் பற்று வைத்தோ அல்லது கணக்கின் மீது காசோலை கொடுத்தோ வாங்கவேண்டும்.

## 22. மூன்றாம் நபர் நிதிப்பொருட்களை (காப்பீடு, பரஸ்பர நிதிநிறுவன முதலீடுகள்) வாங்கும்போது வங்கியிடம் KYC நடைமுறையைப் பின்பற்ற வேண்டுவது அவசியமா?

ஆம். வங்கியில் கணக்கு வைத்திராத வந்துபோகும் வாடிக்கையாளர்கள் தங்களின் அடையாளம் மற்றும் முகவரி சான்றாவணங்களை வங்கியில் காட்டியே ரூ. 50,000 மற்றும் அதற்கும் அதிகமான மூன்றாம் நபர் நிதிப் பொருட்களை வங்கியிடமிருந்து வாங்கமுடியும். வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் மூன்றாம் நபர் நிதிப் பொருட்களை வாங்கும்போது **KYC** நடைமுறை தேவையில்லை. ஆயினும், வங்கிக் கணக்கில் பற்று வைத்து ரூ.50,000 மற்றும் அதற்கும் அதிகமான மதிப்புள்ள மூன்றாம் நபர் நிதிப்பொருட்கள் சார்ந்த பரிவர்த்தனைகளை (பணமாற்றம் / காசோலை கொடுத்து தங்கம் / பிளாட்டினம் வாங்குதல் போன்றவை) மேற்கொள்ளும்போது, வருமானவரிக் கணக்கு எண்ணைக் குறிப்பிடவேண்டியது அவசியம். இது வந்து போகும் வாடிக்கையாளருக்கும் பொருந்தும்.

## 23. நான் KYC நடைமுறைத் தேவைகளை கணக்குத் தொடங்கியபோதே பூர்த்தி செய்துவிட்டேன். வங்கி மீண்டும் எதற்கு என்னை KYC தேவைகளைப் பூர்த்திசெய்யக் கோருகிறது?

வங்கிகள் **KYC** பதிவேடுகளில் உள்ள விவரங்களை அவ்வப்போது திருத்தியமைத்து சரிவர பராமரிப்பது அவசியமாகும். வங்கிக் கணக்கு மேலாண்மையில் இது முக்கியமானது. இடர்வரவு மதிப்பீட்டின்படி, வங்கிகள் **KYC** தகவல்களைப் புதுப்பிக்கும் காலவரையறை நிர்ணயிக்கப்படும். இதனால் வங்கிக் கணக்குகளில் மோசடிகள் நிகழ்வதும் தடுக்கப்படும்.

## 24. சீரான கால அளவில் KYC தகவல்கள் புதுப்பித்தல் / திருத்தியமைத்தல் குறித்த விதிமுறைகள் யாவை?

பதில்: **KYC** பதிவேடுகளைப் புதுப்பிக்கும் கால இடைவெளி ஒவ்வொரு வங்கிக்கும் அதன் இடர்வரவு குறித்த பார்வையைப் பொறுத்து மாறுபடும். இடர்வரவு அதிகமுள்ள கணக்குகளைப் பொறுத்தவரை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை, நடுத்தர இடர்வரவு உடைய கணக்குகளுக்கு எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மற்றும் குறைந்த இடர்வரவு உடைய கணக்குகளுக்கு பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை **KYC** பதிவேடுகள் திருத்தியமைக்கப்படலாம்.

அவ்வப்போது சீரான இடைவெளியில் **KYC** பதிவேடுகள் புதுப்பிக்கப்படும்போது, குறைந்த இடர்வரவுடைய கணக்குகளைப் பொறுத்தவரை, பதிவேட்டுத் தகவல்களில் மாற்றமில்லையென்றால், வாடிக்கையாளர்களை 'மாற்றம் ஏதுமில்லை' என்ற சுய சான்றிதழ் அளிக்கக் கோரலாம். அவர்களிடம் ஆவணங்களைக் கோராமல் விட்டு விடலாம்.

குறைவான இடர்வரவு உடைய கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களின் முகவரியில் ஏதேனும் மாற்றமிருப்பின், அதற்கான சான்றாவணத்தின் நகலை (சான்றொப்பமிட்ட) அவர்கள் மின்னஞ்சல் அல்லது அஞ்சல் மூலமாகக் கூட அனுப்பிடக் கோரலாம். இவ்வாறு **KYC** பதில் திருத்தப்படுவதற்கு இத்தகு வாடிக்கையாளர்கள் நேரில் வரவேண்டிய அவசியமில்லை.

உரிய வயது இல்லாத (மைனர்) வங்கி வாடிக்கையாளர்கள், சட்டப்பூர்வ வயதை எட்டும்போது அவர்களின் புகைப்படத்தைக் கொடுக்கவேண்டியது அவசியம்.

## 25. சீரான கால இடைவெளியில் KYC பதிவேடு புதுப்பிக்கப்படும்போது நான் KYC - க்குத் தேவையான ஆவணங்களைக் கொடுக்காவிடில் என்ன நடக்கும்?

நீங்கள் கொடுக்காவிட்டால், வங்கி உங்கள் கணக்கை முடிக்க வாய்ப்பு உண்டு. ஆனால், அவ்வாறு செய்வதற்கு முன், பகுதியளவு உங்கள் கணக்கின் செயல்பாடுகளை முடக்கலாம் (வரவுகளை அனுமதித்து, பற்றுகளைத் தடுத்து, உங்கள் கணக்கை முடித்துப் பணத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லலாம்). பின்னர் முற்றிலும் கணக்கை முடக்கலாம் (வரவுகளையும் மறுக்கலாம்) எது பற்றியும் உங்களுக்கு முன்னறிவிப்புக் கொடுத்தபின் வங்கி இவற்றைச் செயல்படுத்தும்.

## 26. வங்கிக் கணக்கில் பகுதியளவு முடக்கம் எவ்வாறு விதிக்கப்படும்?

பகுதியளவு முடக்கம் பின்வரும் வகையில் விதிக்கப்படலாம்.

இதைச் செயல்படுத்தும் முன் வங்கிகள் 3 மாத அறிவிப்பை வாடிக்கையாளருக்கு அனுப்பும்.

இந்த அறிவிப்பிற்குப் பின் ஒரு நினைவூட்டல் 3 மாத அவகாசத்திற்கு அனுப்பப்படும்.

இதற்குப் பின் வரவுகள் அனுமதிக்கப்பட்டு, பற்று / எடுத்தல் முடக்கப்பட்டு கணக்கினை முடிக்க வாய்ப்பளிக்கப்படும்.

முதலில் அறிவிப்புக் கொடுத்த 6 மாதங்களுக்குப் பின்னரும் **KYC** தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிடில் வங்கியில் உள்ள அந்தக் கணக்கில் பற்று / வரவு அனைத்தும் முடக்கப்பட்டு, அது செயல்படா கணக்காக அறிவிக்கப்படும்.

இதற்கிடையில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர் **KYC** தேவைக்குரிய ஆவணங்களை வங்கியில் சமர்ப்பித்து கணக்கினை சீர் செய்து கொள்ளலாம்.

**Content Source from (https://www.rbi.org.in/commonman/English/scripts/faqs.aspx?id=840#top)**

Date: 02/09/2016

**Know Your Customer Guidelines**

**(Updated up to September 02, 2016)**

*(This is a summarised and simplified version of the Reserve Bank of India's Know Your Customer guidelines.)*

**Q1. What is KYC? Why is it required?**

**Response:** KYC means "Know Your Customer". It is a process by which banks obtain information about the identity and address of the customers. This process helps to ensure that banks' services are not misused. The KYC procedure is to be completed by the banks while opening accounts. Banks are also required to periodically update their customers' KYC details.

**Q2. What are the KYC requirements for opening a bank account?**

**Response:** To open a bank account, one needs to submit a 'proof of identity and proof of address' together with a recent photograph.

**Q3. What are the documents to be given as 'proof of identity' and 'proof of address'?**

**Response:** The Government of India has notified six documents as 'Officially Valid Documents' (OVDs) for the purpose of producing proof of identity. These six documents are Passport, Driving Licence, Voters' Identity Card, PAN Card, Aadhaar Card issued by UIDAI and NREGA Job Card. You need to submit any one of these documents as proof of identity. If these documents also contain your address details, then it would also be accepted as 'proof of address'. If the document submitted by you for proof of identity does not contain address details, then you will have to submit another officially valid document which contains address details.

**Q4. If I do not have any of the documents listed above to show my 'proof of identity', can I still open a bank account?**

**Response:** Yes. You can still open a bank account known as 'Small Account' by submitting your recent photograph and putting your signature or thumb impression in the presence of the bank official.

**Q5. Is there any difference between such 'small accounts' and other accounts**

**Response:** Yes. The 'Small Accounts' have certain limitations such as:

- balance in such accounts at any point of time should not exceed Rs.50,000
- total credits in one year should not exceed Rs.1,00,000
- total withdrawal and transfers in a month should not exceed Rs.10,000
- Foreign remittances cannot be credited to such accounts.

Such accounts remain operational initially for a period of twelve months and thereafter, for a further period of twelve months if the holder of such an account provides evidence to the bank of having applied for any of the officially valid documents within twelve months of the opening of such account.

**Q6. Would it be possible, if I do not have any of the officially valid documents, to have a bank account, which is not subjected to any limitations as in the case of 'small accounts'?**

**Response:** A normal account can be opened by submitting a copy of any one of the following documents as Proof of Identity (PoI):

(i) Identity card with person's photograph issued by Central/State Government Departments, Statutory/Regulatory Authorities, Public Sector Undertakings, Scheduled Commercial Banks, and Public Financial Institutions;

or

(ii) letter issued by a gazetted officer, with a duly attested photograph of the person.

For Proof of Address (PoA), you may submit the following documents:

i. Utility bill, which is not more than two months old, of any service provider (electricity, telephone, post-paid mobile phone, piped gas, water bill);
ii. Property or Municipal Tax receipt;
iii. Bank account or Post Office savings bank account statement;
iv. Pension or family Pension Payment Orders (PPOs) issued to retired employees by Government Departments or Public Sector Undertakings, if they contain the address;
v. Letter of allotment of accommodation from employer issued by State or Central Government departments, statutory or regulatory bodies, public sector undertakings, scheduled commercial banks, financial institutions and listed companies. Similarly, leave and license agreements with such employers allotting official accommodation; and
vi. Documents issued by Government departments of foreign jurisdictions or letter issued by Foreign Embassy or Mission in India.

This, however, is not a general rule and it is left to the judgement of the banks to decide whether this simplified procedure can be adopted in respect of any customer.

**Q7. If my name has been changed and I do not have any OVD in the new name, how can I open an account?**

**Response:** A copy of the marriage certificate issued by the State Government or Gazette notification indicating change in name together with a certified copy of the 'Officially Valid Documents' in the prior name of the person is to be furnished for opening of account in cases of persons who change their names on account of marriage or otherwise.

**Q8. Are banks required to categorise their customers based on risk assessment?**

**Response:** Yes, banks are required to classify their customers into 'low', 'medium' and 'high' risk categories depending on their AML risk assessment.

**Q9. Do banks inform customers about this risk categorisation?**

**Response:** No

**Q10. If I refuse to provide requested documents for KYC to my bank for opening an account, what may be the result?**

**Response:** If you do not provide the required documents for KYC, the bank will not be able to open your account.

**Q11. Can I open a bank account with only an Aadhaar card?**

**Response:** Yes, Aadhaar card is accepted as a proof of both identity and address.

**Q12. Is it compulsory to furnish Aadhaar Card for opening an account?**

**Response:** No. you may furnish Aadhaar card or any of the other five OVDs for opening an account.

**Q13. What is e-KYC? How does e-KYC work?**

**Response:** e-KYC refers to electronic KYC.

e-KYC is possible only for those who have Aadhaar numbers. While using e-KYC service, you have to authorise the Unique Identification Authority of India (UIDAI), by explicit consent, to release your identity/address through biometric authentication to the bank branches/business correspondent (BC). The UIDAI then transfers your data comprising your name, age, gender, and photograph electronically to the bank. Information thus provided through e-KYC process is permitted to be treated as an 'Officially Valid Document' under PML Rules and is a valid process for KYC verification.

**Q14. Is introduction necessary while opening a bank account?**

**Response:** No, introduction is not required.

**Q15. If I am staying in Chennai but if my proof of address shows my address of New Delhi, can I still open an account in Chennai?**

**Response:** Yes. You can open a bank account in Chennai even if the address in the "Officially Valid Document" is that of New Delhi and you do not have a proof of address for your Chennai address. In such case, you can submit the officially valid document having your New Delhi address, together with a declaration about your Chennai address for communication purposes.

**Q16. Can I transfer my existing bank account from one place to another? Do I need to undergo full KYC again?**

**Response:** It is possible to transfer an account from one branch to another branch of the same bank. There is no need to undergo KYC exercise again for such transfer. However, if there is a change of address, then you will have to submit a declaration about the current address. If the address appearing in the 'Officially Valid Documents' (OVDs) submitted for proof of address is no longer your valid address (i.e. neither your permanent address nor your current address), you need to get an Officially Valid Document for Proof of Address containing the current or the permanent address and furnish the same within six months. In case of opening an account in another bank, however, you will have to undergo KYC exercise afresh.

**Q17. Do I have to furnish KYC documents for each account I open in a bank even though I have furnished the documents of proof of identity and address?**

**Response:** No, if you have opened a KYC compliant account with a bank, other than a 'small account', then for opening another account with the same bank, furnishing of documents is not necessary.

**Q18. For which banking transactions do I need to quote my PAN number?**

**Response:** PAN number needs to be quoted for transactions such as account opening, transactions above Rs.50,000 (whether in cash or non-cash), etc. A full list of transactions where PAN number needs to be quoted can be accessed from website of Income Tax Department at the following URL: **http://www.incometaxindia.gov.in/_layouts/15/dit/pages/viewer.aspx?grp=rule&cname=CMSID&cval=103120000000007541&searchFilter=&k=114b&IsDlg=0**

**Q19. Whether KYC is applicable for Credit/Debit cards?**

**Response:** Yes. KYC exercise is necessary for Credit/ Smart Cards and also in respect of add-on/ supplementary cards. Since debit cards are issued only to account holders and accounts are opened only after the KYC procedure is completed, there is no need for separate KYC for issuing debit card.

**Q20. I do not have a bank account. But I need to make a remittance. Is KYC applicable to me?**

**Response:** Yes. KYC exercise needs to be done for all those who want to make domestic remittances of Rs. 50,000 and above and all foreign remittances.

**Q21. Can I purchase a Demand Draft/Payment Order/Travellers Cheque against cash?**

**Response:** Yes, Demand Draft/Payment Order/Travellers Cheques for below Rs.50,000/- can be purchased against cash and such instruments for Rs. 50000/- and above can be issued only by way of debiting the customer's account or against cheques.

**Q22. Do I need to submit KYC documents to the bank while purchasing third party products (like insurance or mutual fund products) from banks?**

**Response:** Yes, all customers who do not have accounts with the bank (known as walk-in customers) have to produce proof of identity and address while purchasing third party products from banks if the transaction is for Rs.50,000 and above. KYC exercise will not be necessary for bank's own customers for purchasing third party products. However, instructions to make payment by debit to customers' accounts or against cheques for remittance of funds/issue of travellers' cheques, sale of gold/silver/platinum and the requirement of quoting PAN number for transactions of Rs.50,000 and above will be applicable to purchase of third party products from bank by its customers as also to walk-in customers.

**Q23. My KYC was completed when I opened the account. Why does my bank insist on doing KYC again?**

**Response:** Banks are required to periodically update KYC records. This is a part of their ongoing due diligence on bank accounts. The periodicity of such updation varies from account to account depending on its risk categorisation by the bank. Periodic updation of records also helps prevent frauds in customer accounts.

**Q24. What are the rules regarding periodic updation of KYC?**

**Response:** Different periodicities have been prescribed for updation of KYC records depending on the risk perception of the bank. KYC is required to be done at least once in two years for high risk customers, once in eight years for medium risk customers and once in ten years for low risk customers. This exercise would involve all formalities for KYC normally taken at the time of opening the account.

While periodic updation of KYC has to be carried out in respect of customer categorised as 'low risk' also, if there is no change in status with respect to the identity (change in name, etc.) and/or address of such customers the banks may ask such customers to submit only a self-certification about 'no-change in status' at the time of periodic updation. Banks may not ask such customers to submit copies of 'Officially Valid Documents' for periodic updation.

In case of change of address of such 'low risk' customers, they could merely forward a certified copy of the document (proof of address) by mail/post, etc. Physical presence of such low risk customer is not required at the time of periodic updation.

Customers who are minors have to submit fresh photograph on becoming major.

**Q25. What if I do not provide the KYC documents at the time of periodic updation?**

**Response:** If you do not provide your KYC documents at the time of periodic updation, bank has the option to close your account. Before closing the account, the bank may, however, impose 'partial freezing' (i.e. initially allowing all credits and disallowing all debits while giving an option to you to close the account and take your money back). Later, even credits also would not be allowed. The 'partial freezing' however, would be exercised by the bank after giving you due notice.

**Q26. How is partial freezing imposed?**

**Response:** Partial freezing is imposed in the following ways:

- Banks have to give due notice of three months initially to the customers before exercising the option of 'partial freezing'.

- After that a reminder for further period of three months will be issued.
- Thereafter, banks shall impose ‘partial freezing’ by allowing all credits and disallowing all debits with the freedom to close the accounts.
- If the accounts are still KYC non-compliant after six months of imposing initial ‘partial freezing’ banks shall disallow all debits and credits from/to the accounts, classifying them inoperative.

Meanwhile, the account holders can revive accounts by submitting the KYC documents.